நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.145/2013

<u>அ.த.சா: 21 (LW29 )சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேஷ் பாபு. | சாதி | : | |
| தந்தை பெயர் | : | P.ரெங்கசாமி. | தொழில் | : | காவல் ஆய்வாளர். |
| கிராமம் | : | விருதுநகர். | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | 50. |

20.02.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(A3, A4, A5, A10, A11 எதிரிகள் ஆஜர். (12வது எதிரி Split up SC 1/2026). A1, A2, A6, A7, A8, A9, A13 வது எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு–317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திருமதி. சாந்தி, இளநிலை உதவியாளர் அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>** தொடங்கப்பட்ட நேரம் : 11.05 A.M

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் AHTU –ல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2012 ஆம் வருடம் சிபிசிஐடி கள்ளநோட்டு தடுப்பு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்த போது தேனி அல்லிநகரம் காவல் நிலைய குற்ற எண் 847 /2008 வழக்கில் புலன் விசாரத்னைக்கு எடுதுக் கொண்டேன். இந்த வழக்கில் இதற்கு முன்பு இருந்த புலன் விசாரணை அதிகாரிகள் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:00:34 +0530

சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர். அதே சாட்சிக ளை மறுபடியும் விசாரிக்கும் போது முந்தைய புலன் விசாரணை அதிகாரிகளிடம் கூறியது போல் சொன்னதால் மறுபடியும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை மேலும் இவ் வழக்கில் தலைமறைவு எதிரி பாண்டி என்பவரை 22.11.2012ம் தேதி திருப்பூர் முதல் ஈரோடு மெயின் ரோடு எஸ் பெரியபாளையம் பஸ் ஸ்டாப் அருகில் வைத்து கா லை 08.45 மணிக்கு கைது செய்து சாட்சிகள் விஜயலட்சுமி மற்றும் ஈசாக் அவர்கள் முன்னிலையில் விசாரித்து எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து மேலும் அந்த பகுதியில் குடியிருந்த சாட்சி பழனியம்மாள் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரியை முறையாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

11.12.2012–ம் தேதி இவ் வழக்கில் 5வது எதிரி பாண்டி குடியிருந்த வீட்டின் முன்னால் ஓனர் திரு. முருகேசன், ஆனந்த் அவர்களை விசாரணை செய்தனர். திரு. ஆனந்தன் அவர்கள் எதிரி தன்னுடன் பெயின்டர் வேலை பார்த்தது பற்றி கூறுகிறார் மேலும் எதிரியின் மனைவி பாண்டி கல்லநோட்டு வழக்கில் சம்மந்தப்பட்டது பற்றியும் கூறுகிறார். 17.01.2013–ம் தேதி சாட்சி எஸ்.எஸ்ஐ ராமகிருஷ்ணன் வழக்கின் கைப்பட்டபட்ட பொருள்களை தடையவியல் ஆய்வகத்திற்கு எடுத்து சென்றது பற்றியும் மேலும் பாண்டி கைது செய்ய உதவியது பற்றியும் கூறுகிறார். 18.01.2013–ம் தேதி இந்த வழக்கில் முதல் விசாரணை அதிகாரி கோபிநாத் பாண்டியன் மற்றும் ராமச்சந்திரன் காவல் ஆய்வாளர் ஆகியோர்களை விசாரித்து இவ் வழக்கில் அன்றைய தினமே எதிரிகள் 13 நபர்கள் மீது கள்ளநோட்டை அச்சடித்தற்காகவும் கள்ளநோட்டை புலக்கத்திற்கு விட்டதற்காகவும் மேலும் கள்ளநோட்டை கைபற்ற விடாமல் அழித்தற்காகவும் மேற்படி எதிரி மீது சட்டப்பிரிவு 120 B, 489(A) 489(B) 489(C) 489(D) மற்றும் 420 சட்டப்பிரிவு 120 B, 489(A) 489(B) 489(C) 489(D) 420 r/w 201, 109 IPC அன்றைய தினம் எதிரி A3 ஜபர்உல்லாகான் @ ஜபர்உல்லா தலைமறைவாக இருந்து வந்தார் குற்றறிக்கை கணம் குற்றவியில் நடுவர் நீதிமன்றம்

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:00:40 +0530

தேனி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். வழக்கு சம்மந்தமாக 5—வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி வழக்கு சொத்து கைபற்றபட்ட இயலவில்லை என்பதற்கான காரணம் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி வழக்கு சொத்து அழிக்கப்பட்ட நிலையில் கைப்பற்ற இயலவில்லை. எதிரி பாண்டியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி மேற்படி ஒப்புகொள்ளப்பட்ட பகுதி **Ex.P49** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>1 மற்றும் 3—வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

இந்த வழக்கு கோப்புகளை புலன் விசாரணைக்காக எந்த தேதியில் யாரிடமிருந்து பெற்று கொண்டேன் என்றால் 01.02.2012—ம் தேதி முந்தைய புலன் விசாரணை அதிகாரி திரு. ராமச்சந்திரன் அவர் பணி மாறுதலில் சென்ற பிறகு இந்த வழக்கு கோப்பினை நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன். இதற்கு முந்தைய புலன் விசாரணை அதிகாரியான LW28 (PW20) ராமச்சந்தின் என்பவர் 13.08.2011ம் தேதி அன்று மேற்படி காவல் நிலையத்தில் இருந்து பணி மாறுததில் சென்றுவிட்டார் என்றால் சரிதான். நீங்கள் சொன்ன தேதியிலில் வழக்கு கோப்பினை வாங்கவில்லை என்றால் தவறு. நீங்கள் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் கடந்த 2012ம் வருடம் ஜனவரி மாதம்காவல் ஆய்வாளர்ராக பணியில் சேர்ந்தேன் தேதி நினைவு இல்லை. இந்த வழக்கில் 489(A) IPC படி இந்த குற்றத்தினை எதிரிகள் செய்ததாக நம்ப தகுந்த முறையில் நம்ப தகுந்த தனி நபர் சாட்சியாளர்கள்கொண்டு நிருபணம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. U/s 489(B) IPC ன் படி இந்த வழக்கில் கள்ள நோட்டினை கொண்டு வேறு யாருக்கேனும் கொடுத்ததாகவோ மற்றும் கொடுத்து வேறு பொருள்களை வாங்க பயன்படுத்தியதாகவோ சாட்சிகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக புலன் விசாரணையை நானும் மேற்கொள்ளவில்லை இதற்கு முன்னர் இந்த வழக்கில் புலன் விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரிகளிடமும் இது சம்மந்தமாக வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. U/s 489(C) IPC ன் படி இந்த வழக்கு சம்மந்தமான கள்ளநோட்டுகளை கைவசம் வைத்திருந்ததாக நம்பதகுந்த சாட்சியாளர்களை கொண்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. U/s 489(D) IPC ன் சான்று பொருளா

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:00:46 +0530

எலக்ட்ரானிக் டிவைசஸை உற்பத்தி செய்த மற்றும் விற்பனை செய்த நிறுவனங்களிலிருந்து அந்த பொருட்களை யார் வாங்கினார்கள் என்பது குறித்த புலன் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் விசாரித்துள்ள சாட்சிகள் காவல்துறையில் தங்களுடன் சேர்ந்து பணிபுரிகின்ற பணியாளர்கள் மற்றும் தங்கள் துறைக்கு உறுதுணையாக உள்ள வருவாய்துறையில் பணியாற்றுகின்ற VAO மற்றும் உதவியாளர்களை அளித்த சாட்சியங்கள் நம்பக தன்மை அற்றவைகள் மற்றும் ஏற்றுகொள்ள கூடியவை அல்ல என்றால் சரியல்ல. நீங்களே இந்த வழக்கில் காலம்கடந்து தான் புலன் விசாரணை மேற்கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 22.12.2009–ம் தேதி அன்று இந்த வழக்கில் இதற்கு முன்பு புலன்விசாரணை ஐஓ ராமச்சந்திரன் என்பவர் இந்த வழக்கு குறித்த கைப்பற்றபட்ட தடய சொத்துகளை தடய அறிவியல் பகுப்பாய்வுக்கு அனுப்புவதற்காக கீழமை நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோள் கடிதம் வழக்கு கோப்பில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக இதற்கு முந்தைய புலன் விசாரணை அதிகாரி LW28(PW20) புலன்விசாணை அதிகாரியான ராமச்சந்திரன் எந்த தேதியில் விசாணை செய்தனர் என்றால் 18.01.2013 அன்று புலன் விசாரணை செய்தனர். அது சம்மந்தமான ஆவணங்கள் வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளின் பட்டியலில் LW29(PW21) ஆகிய நான் எனது பட்டியலில் இவ் வழக்கு குறித்து மேல் விசாரணை மேற்கொண்டு வழக்கின் 5 ஆவது எதிரியை கைது செய்தது பற்றியும் எதிரிகளின் மீது குற்றப்பத்திறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் மட்டுமே குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். LW28(PW20) அவரை புலன் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தது சம்மந்தமான ஆவணங்கள் வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரிதான், பொதுவாக விசாரணை அதிகாரியின் வாக்குமூலத்தில் குற்றபத்திரைகளில் இணைப்பது வழக்கம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக 29.01.2013 அன்று நீங்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தடய சொத்துகள் ஆய்வறிக்கை அளித்த LW26(PW18) வேலுச்சாமி என்பவர் அவரது சாட்சியத்தில் 30.06.2010–ம் தேதி அன்று

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:00:52 +0530

தான் இவ் வழக்கு சம்மந்தப்பட்ட தடய சொத்துக்களை ஆய்வுக்காக பெற்று கொண்டேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் சம்பவம் நடந்த தேதி 16.11.2008 என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த தேதியில் இருந்து 2 ½ ஆண்டுகள் பின்னர் தான் தடய ஆய்வுகள் பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்வையிட்டதில் அவ்வாறு தான் உள்ளது. காலம் கடந்து பகுப்பாய்வுக்கு அனுப்பபடும் போது எலக்டானிக் டிவைஸ் அசல் மற்றும் ஒரிஜினல் தன்மை வேறுபடுவதற்கு வாய்புள்ளது என்றால் சரியல் அந்த எலக்டானிக் டிவைஸ் உரிய கடவு சொல்லை எவ்வாறு யாரிடமிருந்து பெற்றோம் என்று புலப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பட்டபட்ட எலக்டானிக் டிவைஸ் பயன்படுத்தபட்ட இடத்தில் இருந்த மின் இணைப்பானது மும்முனை இணைப்பா அல்லது வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் ஒரு முனை இணைப்பா அல்லது வணிகவாலகத்திற்கு வழங்கப்படும் மின் இணைப்பு குறியீடான டேரிப் 4 அல்லது 5 என்பது குறித்து புலன் விசாரணையில் தெளிவான குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக முந்தைய புலன் விசாணை அதிகாரி தல ஆய்வு மேற்கொண்டதற்கான பார்வை மகஜர் வரைபடம் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக தனியறிக்கை தாக்கல் செய்த நபர் யார் என்று தெரியுமா என்றால் முத்து பிரேம்சந்த் ஆண்டிபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முத்து பிரேம் சந்த் அளித்த தனியறிக்கையில் எந்த மொழியில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் தமிழில் கையொப்பம் செய்துள்ளார். பதிவு செய்யப்பட்டுள்ள printed FIRலும் தமிழிலும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 அரசு அதிகாரியாக இருப்பதால் தமிழிலோ அல்லது ஆங்கிலோத்திலோ ஏதாவது ஒரு மொழியில் கையொப்பம் போட உரிமை உள்ளதா என்றால் உள்ளது. அவர் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அவருடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அவருடைய கையொப்பமா என்றால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அவர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் முதல் தகவல் அறிக்கையில் (printed FIR) தமிழில் உள்ள கையொப்பமும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் உள்ள ஆங்கில கையொப்பமும் தன்னுடையதுதான் என சாட்சியம்

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:00:59 +0530

அளித்துள்ளார் என்றால் அவருடைய கையொப்பம் பற்றி அவர்தான் விளக்கம் அளிக்க இயலும் என்னால் அளிக்க இயலாது. தனியறிக்கை தாக்கல் செய்த நபரே புலன் விசாரணை அதிகாரியாக இருப்பது இயற்கை நீதி கோட்பாட்டிற்கு ஏற்புடையது அல்ல என்றாலும் ஒருதலைபட்சமான விசாரணை மேற்கொள்ள வாய்புள்ளது என்று சொன்னால் சரியல்ல. 18.01.2013ம் தேதி அன்று இந்த வழக்கில் முதல் புலன் விசாணை அதிகாரியான கோபிநாத் பாண்டியன் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தில் இந்த வழக்கில் தனியறிக்கை தாக்கல் செய்த LW1(Pw1) என்பவர் இந்த வழக்கு குறித்து புலன் விசாரணை மேற்கொண்ட விவரத்தினை சொல்லியுள்ளது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலமான (அ.சா.ஆ.8ன்) சாட்சிகளான சாட்சி பட்டியல் எண்.4, சாட்சி பட்டியல் எண்.5 இருவரும் அல்லிநகர காவல் நிலையத்திலிருந்து தொலை பேசி மூலமாக 16.11.2008ம் தேதி இரவு 08.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு வரச்சொன்னதன்பேரில் 16.11.2008ம் தேதி இரவு 08.45 மணிக்கு காவல் நிலையம் வந்துவிட்டோம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சமூக நீதிமன்றத்தில் அ.சா.3 மற்றும் அ.சா.6 அவ்வாறே சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இவ்வழக்கில் printed FIR 16.11.2008ம் தேதி இரவு 09.00 மணியளவில்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்காவல் ஆய்வாளருக்கு தனியறிக்கை தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை காலம் 6ல் குறிப்பிடப்பட்டுள்ள முத்து பிரேம்சந்த் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் மற்றும் நேரம் வழக்கு சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதன் தொடர் நடவடிக்கைகள் குறித்த நாள் மற்றும் நேரம் முன்னுக்கு பின் முரண்பாடாக உள்ளதால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்து சந்தேகம் எழுகிறது என்றால் சரியல்ல. சாட்சி பட்டியல் எண்.26(அ.சா.18) திரு.வேலுசாமி, இளநிலை அறிவியாளர் அவர்கள் முந்தைய I.O விசாரணையின்போது ஆங்கிலத்தில் வாக்குமூலம் அளித்தாரா அல்லது தமிழ் மொழியில் அளித்தாரா என்றால் ஆங்கிலத்தில் அளித்தார்.

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:01:06 +0530

இவ்வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்ட தடய அறிவியல் ஆய்வக வேதியியல் பகுப்பாளரான சாட்சி பட்டியல் எண்.26 (அ.சா.18) ஆகிய வேலுசாமி அவர்கள் எந்த அசல் ரூபாய் நோட்டின் எண்ணினை குறிப்பிட்டு இவ்வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட ரூபாய் நோட்டுகளுடைய எண்களை ஒப்பிட்டு பார்த்தார் என்று தன்னுடைய ஆய்வறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல இந்த வழக்கு சம்பந்தப்பட்ட எலக்ட்ரானிக் டிவைஸ் எந்தவொரு எதிரியும் தங்களுக்கு சொந்தமானது என அதை தங்கள் வசம் ஒப்படைக்க வேண்டி மனு எதுவும் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் என்னுடைய புலன் விசாரணை காலத்தில் எந்தவொரு வேண்டுகையும் முன் வைக்கவிலலை. ஆ.சா. 1 ன் தனியறிக்கையில் 1, 2 எதிரிகள் பெயர் மட்டும் குறிப்பிட்டு மற்ற எதிரிகள் பெயர் குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சரிதான். 3ம் எதிரி கிரி என்பவர் ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் பரக் அப்புதுல்லா மற்றும் தேனி காவல் நிலைய ஆய்வாளர் ஜெபராஜ் ஆகியோர்களுக்கு எதிராக ரிட் மனு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்பதற்காக 3ம் எதிரி மீது இந்த வழக்கானது வேண்டுமென்றே போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3ம் எதிரியின் மீது தடய சொத்துகள் கைப்பற்றப்பட்டது என்ற சங்கதியானது உன்மைக்கு மாறானது என்று சொன்னால் சரியல்ல. அவரிடமிருந்து நேரடியாக கள்ளநோட்டு கைபற்றப்பட்டது என்றால் சரிதான். 3ம் எதிரிக்கு எதிராக ஆஜர்படுத்தப்பட்ட இந்த வழக்கு சம்மந்தமான ஆவணங்கள் மற்றும் தடய பொருள்கள் அனைத்தும் பின்னிட்டு ஜோடிக்கப்பட்டு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக தடய பொருள்கள் இருந்ததாக சொல்லப்பட்ட இடத்தினை பரிசோதனை செய்ததற்கு சர்ச் வாரண்ட் நீதிமன்றத்தில் இருந்து முறையாக பெறப்படப்படவில்லை என்றாலும் அவ்வாறு பெறப்பட்டிருந்தால் அதற்குண்டான ஆவணமான வேண்டுகோள் கடிதம் வழக்கு கோப்பில் இருக்கும் என்று சொன்னால் அது பற்றி நீதிமன்ற ஆவணங்களை பார்வையிட்டுதான் சொல்ல முடியும். இவ்வழக்கு சம்பந்தமாக முன்னிலைப்படுத்தப்பட்ட எலக்ட்ரானிக் டிவைஸ்

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:01:13 +0530

மற்றும் பணம் (கள்ள பணம்) எவைக்கும் 1 மற்றும் 3 எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வழக்கிற்காக பின்னிட்டு ஜோடிக்கப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கானது ஒவ்வொரு மாவட்டத்திலும் கள்ள நோட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற புள்ள விபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**2, 4 முதல் 11 மற்றும் 13 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1 மற்றும் 2 எதிரிகள் தங்கள் வசம் வைத்திருந்ததாக சொல்லப்பட்ட கள்ளநோட்டுகளை யாரிடம் கொடுப்பதற்காக காத்துகொண்டிருந்தார்கள் என்பது பற்றி எனது புலன் விசாரணையில் அவர்கள் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட கள்ளநோட்டுகள் புலகத்திற்கு விடப்பட்டு அதன் மூலம் எவரேனும் முறையற்ற முறையில் ஆதாயம் அடைந்ததாகவோ அல்லது சட்டத்திற்கு புறம்பாக எவரேனும் பாதிக்கப்பட்டது சம்மந்தமாக முகாந்திரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக தனியறிக்கை தாக்கல் செய்த முத்து பிரேம் சந்த் ஆண்டிபட்டி காவல்நியைல சார்பு ஆய்வாளர் என்றாலும் அவர் கள்ளநோட்டு புலக்க தனிப்பிரிவு அதிகாரி என்பதற்கு எந்தவிதமான ஆவணமோ அல்லது அதிகார ஒப்படைவு உத்தரவு எதுவும் இந்த வழக்கு கோப்பில் தாக்கல் செய்யபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட குற்றம் மற்றும் அதற்கு வழங்கபட வேண்டிய தண்டனை அடிப்படையில் விசாரணையில் அதிகாரியின் பதவு மாறுபடும் என்றாலும் 7 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை வழங்க கூடிய குற்றங்களுக்கு வழக்கமாக உயர்மட்ட நிலை அதிகாரிகளுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கைப்பட்டப்பட்ட வழக்கு சொத்து உற்பத்தி செய்யப்பட்ட இடம், விற்பனை செய்யப்பட்ட இடம் யாருக்காக யார் வாங்கியது என்பது குறித்த விபரம் மற்றும் அது எந்த நிறுவனத்தை சார்ந்த பொருள் என்பது பற்றியும் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 5ம் எதிரியை திருப்பூர் மாட்டம் பெரியபாளையத்தில் வைத்து கைது

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:01:21 +0530

செய்யப்பட்ட நபருடைய பூர்வீக ஊரான சிவகாசி அருகில் உள்ள திருதங்கள் கிராமம் அவரது உற்றார் உறவினர்களை விசாரனை செய்து அவர் தலைமறைவாக வாழ்ந்து வந்தார் என்பதற்கு ஏதேனும் முகாந்திரம் தங்கள் புலன் விசாரணையில் உள்ளது என்றால் ரகசிய புலன் விசாரணையில் தெரியவந்தது. 5ம் எதிரினுடைய செல்போன் நம்பரை வைத்து அவரை டவர் லொக்கேசன் குறித்து விசாரணை எதுவும் மேற்கொண்டீர்களா என்றால் அவர் சிம்மை மாற்றிவிட்டதால் எங்களால் கண்காணிக்கமுடியவில்லை அவ்வாறு அவர் சிம்மை மாற்றிவிட்டார் என்பதற்கோ அவ்ர் பழைய சிம்மை எந்த நாள் வரை எந்த எல்லைக்குள் பயன்படுத்தி வந்தார் என்பது பற்றி விசாரித்து அதற்குண்டான ஆவணம் எதுவும் தாக்கல் செய்து உள்ளார் என்றால் இல்லை. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியுடைய அழைப்பேசி எண்களை ஆய்வு செய்து அவர்கள் எங்கு எங்க வைத்து யார் யாருடன் தொடர்பில் இருந்தார்கள் என்பது குறித்து புலன் விசாரணை மேற்கொண்டு அறிக்கை ஏதும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. 5ம் எதிரியை திருப்பூர் மாவட்ட பெரியபாளையை பஸ் ஸ்டாப்பில் வைத்து சந்தேகத்தின் பெயரில் தான் கைது செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். கைது செய்யும் போது போலிஸ் டீம் மட்டும் தான் இருந்தோம் என்று சொன்னால் சரிதான். 5ம் எதிரி குடியிருந்தாக சொல்லப்பட்ட வீட்டின் உரிய உரிமையாளர் அவர் எவ்வளவு காலமாக அவர் அங்கு குடிந்தார் என்ற விவரம் எதுவும் தனது விசாரணையில் தெரியவந்தா என்றால் ஆம் தெரியவந்தது அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் 5ம் எதிரி குடியிருந்ததாக சொல்லப்பட்ட வீட்டின் உரிமையாளரை சாட்சியாக சாட்சி பட்டியலில் காட்டியுள்ளேன். வழக்கு பதவு செய்யப்பட்ட ஆண்டு 2008ல் இருந்து ஏரத்தால் 4 ஆண்டுகள் களித்து 5ம் எதிரி கைது செய்யப்பட்ட நிலையில் அவர் அந்த காலகட்டத்தில் எங்கு எங்கு எவ்வளவு காலம் எந்த குடியிருப்பில் குடியிந்தார் என்று முழு விவரம் விசாரணையில் தெரியவந்தா என்றால் தெரியவந்தது அது சம்மந்தமாக முருகேசன் என்பவர் வாக்குமூலம் கொடுத்துள்ளார். ஆனந்தன் என்பவர் பெய்ன்டிங் காண்டாரக்டாக இருந்ததாகவோ அவரிடம் 5ம் எதிரி வேலை பார்ததாகவோ சம்பள

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:01:26 +0530

பாக்கியாக 5ம் எதிரி மனைவி ஆனந்தன் என்பவரிடம் பெற்றதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக தலைமறைவு எதிரி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் போது தலைமறைவு எதிரியின் பெயர் தனியாக வேறுபடுத்தி காட்டப்படுவது வழக்கம் என்று சொன்னால் சரிதான் அவ்வாறு இருக்கையில் இந்த வழக்கு சம்மந்தமான ஜபர்உல்லாகான் என்ற எதிரி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் அவர் கைது செய்யப்படாமலும் வேறு எந்த வகையிலும் பிணையில் செல்லாத பட்சத்தில் அவர் பெயர் ஏன் குற்றப்பத்திரிகையில் தனித்து காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல, அவருடைய பெயர் வேறுபடுத்தி குறிப்பாக சிகப்பு மையால் அவர் பெயர் சுட்டி காட்டபட்டுள்ளது. ஜபர்உல்லாகான் என்ற எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறபடவில்லை என்றால் சரிதான். பாண்டி என்ற எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையில் எந்த ஒரு பொருளும் கைப்பட்டபவில்லை என்றால் சரிதான் தடயத்தை அழித்தவிட்ட காரணத்தினால் கைப்பற்ற முடியவில்லை. அவ்வாறு கைப்பற்ற முடியவில்லை என்பது சம்மந்தமாகவோ தடயத்தை அழித்துவிட்டது சம்மந்தமாகவோ எந்த ஒரு ஆவணமும் அல்லது சாட்டியமோ முன்னிலை படுத்தவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக காவல்துறையினர் முன் அனுமதி பெற்றோ அல்லது விசேசமாக முன்னிட்டு மேற்கொண்ட சோதனை சம்மந்தமாக பின்னிட்டு நீதிமன்றத்தில் தகுந்த காரணத்தின் அடிப்படையில் அதனை மேற்கோள் காட்டி அனுமதி கடிதம் உத்தரவு பெறப்படுவது வழக்கம் என்ற போதிலும் சோதனை மேற்கொண்டு வழக்கு சொத்து கைப்பற்றபட்டாலோ அல்லது கைப்பற்றபடவில்லை என்றாலோ அதற்குண்டான ஆவணம் இருக்கும் என்றும் சொன்னால் சரிதான். இந்த வழக்கில் முன்னிலையில் படுத்தபட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எவையும் உன்மையானது அல்ல என்றாலும் முறையாக புலன் விசாரணை செய்யாமல் தனியறிக்கை தாக்கல் செய்த நபர் காவல்துறை அதிகாரி என்ற அடிப்படையில் அவர் கொடுத்த அறிக்கையை நாயப்படுத்த வேண்டும் என்பதற்காக புள்ளிவிவரம் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றாலும் இவ் வழக்கு

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:03:26 +0530

சொல்லப்பட்ட எதிரிகளுக்கும் இவ் வழக்கிற்கும் தடய பொருள்களுக்கும் எந்த விதமான சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 02.00 P.M

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.20 18:03:36 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 20-02-2026